முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1224

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.02.2023, சனிக்கிழமை

1. ஓம் என்ற சக்திமிகு பிரணவக்குடிலை
   ஓங்காரமாய் உலகமெங்கும் அறியும் வண்ணம்
   ஆம் என்று உலகோர் ஏற்போர்க்கெல்லாம்
   அறிவு தெளிவுதிடம் ஞானம் அருளும்படி
2. அருளும்படி அற்புதம்பட இயக்கி அருளும் அரங்கனே
   எந்தன் ஆறுமுக ஞானியே
   ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் 21 ம் நாள் 04.02.2023, சனிக்கிழமை)
3. கனிவேலவன் என் சக்தியாகவே
   கருணைவடிவாய் உலகில் சேவையாற்றிவர
   வருகின்ற அரங்கன் உன் தர்மம் உலகை காக்கும்
   வல்லமைமிக்க அரங்கன் உன் சன்மார்க்கம் பேருலகையே மாற்றும்
4. பேரற்புதம்பட உலகோர்க்கு ஞானம் அருளி
   உண்மை ஞான வழிகளை இலகுவாக பின்பற்றி
   அறம்தர்மம் கொண்டே அழியாமை பெற
   ஆக்கம் தரும் அரங்கனே கலியின் சிறந்த ஞானி
5. ஞானி உன் வழிகளை
   நம்பிக்கை வைத்தால் போதும்
   ஞாலமெங்கும் ஞானிகள் படைபெருகும்
   ஞான ஆட்சிக்காலமும் இனிதே உருவாகும்
6. ஆகவே அரங்கன் வழி உலகோர்
   அனுகிவந்தால் ஆறுமுகன் என் அருளை ஆற்றலை
   வரங்களாக இந்த கலியில் பெறக்கூடிய வாய்ப்பும்
   வல்லமைகூடி ஞானிகளாகவே மாறும் சக்தியும் உண்டாகும்
7. ஆகவே உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி வர
   அனைவருக்கும் ஞான சித்தி உறுதி
   யுகமாற்றம் நடத்தும் வல்லமையும்
   உயர்ஞானி அரங்கனாலே கண்டு உலகோர்மகிழ்வுற நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–